C.C 368/15

PW 4

**பெயர் செல்வபரிமளம்**

**தேதி** 16.092022

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து 4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**நான் சம்பவ சமயத்தில் வங்கியில் கிளர்க்காக வேலை பார்த்தேன். போலிசார் மறுவிசாரணைக்காக எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்படவில்லை. போலி நகைகளை திருப்பி கொடுப்பது குற்றம் என்றால் சரிதான். போலி நகைகள் கொடுத்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வங்கி மேலாளரிடம் நான் உடனடியாக புகார் கொடுக்க சொன்னேனா என்றால் சொன்னேன். நகை கடன் பதிவேடு, நகை மும்மண்ட ரிஜிஸ்டர் ஆகியவற்றில நாங்கள் கையெழுத்து வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். மேற்கூறியவிபரத்தை போலிச் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நகை மதிப்பீட்டாளர் என்பவர் தனிப்பட்ட பதிவாளரா அல்லது வங்கியின் பணியாளரா என்றால் ஒப்பந்தின் அடிப்படையில் அவர்கள் பணிபுரிவார்கள். புஷ்பம், தனலட்சுமி ஆகியோர் நகை கடனை திருப்பி விட்டார்கள் என போலிச் வசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 4ம் எதிரியை நான் வங்கியில் வைத்து பார்த்ததாக ஞாபகம் இல்லை. 4ம் எதிரி எங்களது வங்கிக்கு வரவில்லை என்றாலும் அவரை நான் பார்த்ததில்லை என்றாலும் ஞுபாகம் இல்லை. என்னுடைய போலிச் விசாரணையில் நகை மதிப்பீட்டாளர் தங்க நகை என சான்று வழங்கியதால் அதனடிப்படையில் நகை கடன் வழங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 4ம் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் சரியல்ல.**